# கேள்வி:

## "புதிய ஏற்பாட்டு சபையை நாம் அடையாளம் காண்பதெப்படி?"

# பதில்:

இரட்சிப்பு என்பது நல்ல, ஒழுக்கமான செயல்களை மட்டுமே சார்ந்ததாய் இருந்தால், புதிய ஏற்பாட்டு சபையை அடையாளம் கண்டுகொள்ள முயற்சிக்கும் நேரம் வீணானதாய் இருக்கும். சபை ஆரம்பிக்கப்படுமுன்பே, சில மக்கள் மிகச் சிறந்த ஒழுக்க நெறியுள்ளவர்களாய் இருந்தனர், மற்றும் சிலர் கர்த்தருடைய சபைக்குள்ளும், சபைக்குப் புறம்பேயும் இன்றுகூட உயர்ந்த கொள்கைகளுடன் உள்ளனர். ஒழுக்க நெறியானது, பாவி ஒருவரைப் பரலோகத்தில் கொண்டு சேர்க்குமென்றால், இயேசுவின் கொடூரமான மரணமானது தேவையற்றதாகவும், மதியற்றதாகவும் இருந்திருக்கும். ஆனால், இரட்சிப்புக்கு அவரது இரத்தம் அவசியமாயுள்ளது, அவரது இரத்தத்தினாலே கிரயம் கொள்ளப்பட்டபடியால் சபைக்கும் அது அவசியமானது (அப். 20:28). சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிற பாவி ஒருவருக்குண்டான இரட்சிப்பின் கிரயத்தை அவரது இரத்தம் செலுத்துகிறது - அந்தப்பாவி, குற்றங்களிலிருந்து கழுவப்படுகையில் இரட்சிக்கப்பட்டவர்களுடைய கூட்டத்தில் ஒரு உறுப்பினர் ஆகிறார். அந்தக் குழுவே புதிய ஏற்பாட்டு சபையாகும். அந்தக் குழுவின் உறுப்பினராக இருப்பதென்பது, கடந்தகாலப் பாவங்களிலிருந்து இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வதென்று பொருளாகிறது. அந்தக் குழுவில் விசுவாச முள்ளவராய் இருப்பது என்பது பரலோக நம்பிக்கையுடையவர் என்று பொருளாகும். அந்தக் குழுவிற்கு வெளியே இருப்ப தென்பது இரட்சிப்பும், பரலோகத்தின் வாக்குத்தத்தங்களும் இல்லாதிருப்பதென்று பொருளாகிறது. இந்த முரண்பாடானது, ஒருவர் சபையை அடையாளம் கண்டு, அதன் பாகமாக மாறும் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காண்பிக்கிறதாயுள்ளது.

கொரிந்து பட்டணத்தில், பாவிகள் இயேசுவின் வரலாற்

றைக்கேட்டு அவருக்குள்ளாக முழுக்குதலைப் பெற்றனர் (அப். 18:8; ரோமர் 6:3-5ஐக் காண்க). கடந்தகாலப் பாவத் திலிருந்து ஒருமுறை சுத்தமாக்கப்பட்ட அந்தப் பாவிகள், "கொரிந்துவில் உள்ள தேவனுடைய சபையார்" (1 கொரி. 1:2) என்று அழைக்கப்பட்டனர். ஆக, பாவிகள் எங்காவது இயேசு வின் வரலாற்றைக் கேட்டு, விசுவாசத்தினாலே கீழ்ப்படிந்து அதற்குப் பதிலளித்தால் (அப். 16:31; ரோமர் 1:5), உடனடியாக அவர்கள் புதிய ஏற்பாடு சபையாகிய, இரத்தத்தால் கிரயம் கொள்ளப்பட்ட குழுவின் உறுப்பினராகின்றனர்.

பெற்றோர்கள் தங்களின் ஒன்றுமறியாத குழந்தைகளை ஞானஸ்நானப்படுத்துகையில், அது - விசுவாசிகளாய் ஆகாதவர் களாய் அக்குழந்தைகள் இருப்பதால் - வேதவசனத்தில் கூறிய படி இருக்க முடியாது, அக்குழந்தைகள் புதிய ஏற்பாட்டு சபை யின் உறுப்பினர்களாயிருக்க முடியாது. இன்னும், பெற்றோர் கள் மற்றும்/அல்லது குழந்தைகள் "ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம் பண்ணப்படாமல்" (ரோமர் 6:4) தெளிக்கப்பட்டால், அவர்கள் புதிய ஏற்பாட்டு சபையின் உறுப்பினர்கள் ஆகிவிட்டனர் என்று சொல்வது சரியாகாது.

புதிய ஏற்பாட்டில் தனது ஆரம்பம்பற்றிக் காணவியலாமல், ஏதேனும் கலைக்களஞ்சிய நூல்களில் தனது ஆரம்பத்தைப் பற்றிக் காணுகின்ற சபை எதுவும், தன்னைப் புதிய ஏற்பாட்டின் சபை என்று அழைத்துக் கொள்ள முடியாது. எருசலேமில், இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப் பின்[1] வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் தனது ஆரம்பத்தைக் கொண்டிராத சபை (லூக். 24:46, 47; அப். 2:41-47; 11:15) எதுவும் தன்னை புதிய ஏற்பாட்டு சபை என்று சொந்தம் கொண்டாட முடியாது.

யாரேனும் ஒரு மனிதர் அல்லது பெண்ணைத் தனது ஸ்தாபகர் என்று திரும்பிப் பார்க்கும் சபை, தான் இயேசுவால் கட்டப்பட்டது (மத். 16:18) என்று சொந்தம் கொண்டாட முடியாது. புதிய ஏற்பாட்டின் புத்தகங்களுக்கப்பால், வேறு ஏதேனும் சட்ட நூல்களைத் தருகின்ற சபை தன்னைப் புதிய ஏற்பாட்டின் சபை என்று சொந்தம் கொண்டாட முடியாது (யோவா. 14:26; 16:13; 1 யோவா. 4:6; 2 யோவா. 7-9).

இதற்கு மாறாக, வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும் படி ஒரு சபை கூடி வருமென்றால் (அப். 20:7), அது புதிய ஏற்பாட்டு சபையின் ஒரு அடையாளத்தைப் பெற்றுள்ளது

எனலாம். வாரத்தின் முதல் நாளிலே உறுப்பினர்கள் தங்களிடம் உள்ளவற்றிலிருந்து கர்த்தருடைய ஊழியத்திற்கென்று காணிக்கை கொடுத்தார்களென்றால் (1 கொரி. 16:1, 2) அந்த சபை, புதிய ஏற்பாட்டு சபையின் ஒரு அடையாளத்தைப் பெற்றுள்ளது எனலாம். சங்கீதங்கள், கீர்த்தனைகள், ஞானப் பாடல்கள் ஆகியவற்றைப் பாட (எபே. 5:19) ஒரு சபை கூடி வருகிறதென்றால், அந்த சபை, புதிய ஏற்பாட்டு சபையின் ஒரு அடையாளத்தைப் பெற்றுள்ளது எனலாம். ஆராதனையின் இந்த செயல்களோடுகூட, கூடுதலாக இசைக்கருவிகளைப் பயன்படுத்துதல், தூபம் காட்டுதல், விக்கிரங்களை வணங்குதல், ஜெபங்களின்போது மெழுகுவர்த்திகள் கொளுத்துதல் ஆகியவை செய்யப்பட்டதென்றால், இவைகள் புதிய ஏற்பாட்டு சபை எதிலும் காணப்படாத அடையாளங்கள் ஆகும்.

தேவபக்தியுள்ள, நேர்மையான மக்களை கொண்டதாக ஒரு சபை இருக்குமென்றால், அது புதிய ஏற்பாட்டு சபையின் தன்மைகளில் ஒன்றாகும். ஒரு சபையின் உறுப்பினர்கள், உலகத்தாராய், மாம்ச இச்சைகளை நிறைவேற்றுகிறவர்களாய் இருந்தால் (கலா. 5:24, 25; 1 யோவா. 2:15), அது புதிய ஏற்பாட்டுக்குரிய விசுவாசமுள்ள சபையின் நேர் எதிரிடையானதாகும்.

கர்த்தருடைய ஊழியமாகிய சுவிசேஷ அறிவிப்பு, பக்தி விருத்தியுண்டாக்குதல் மற்றும் உபகார உதவி செய்தல் (அப். 11:22-24, 29, 30) ஆகியவற்றில் ஒரு சபை மற்ற சபைகளுடன் ஒத்துழைக்கும் என்றால் அந்த சபை, புதிய ஏற்பாட்டு சபையின் ஒரு அடையாளத்தைப் பெற்றுள்ளது எனலாம். அது ஒரு வேளை மற்ற சபைகளுடன் ஒத்துழைக்கவில்லையென்றால், புதிய ஏற்பாட்டு சபையாக இருப்பதில் குறைவுபட்டுக் காணப்படுகிறது எனலாம். தனிநபர்கள் சுவிசேஷ அறிவிப்புப் பணி செய்வதிலும் (பிலி. 4:15-17), தேவனுடைய மக்களுக்குப் பக்தி விருத்தி ஏற்படுத்துதலிலும் (அப். 15:3), உதாரகுணத்திலும் (அப். 6:1-6) ஒரு சபை ஒத்துழைக்கிறதென்றால், அந்த சபை புதிய ஏற்பாட்டு சபையின் ஒரு அடையாளத்தைப் பெற்றுள்ளது எனலாம். அது இப்படிப்பட்ட ஒத்துழைப்பை மறுக்கிறதென்றால், புதிய ஏற்பாட்டு சபையாக இருப்பதில் குறைவுபட்டுக் காணப்படுகிறது எனலாம்.

சபை ஒரு பெயரை மட்டும் பெற்றிருந்தால், புதிய

ஏற்பாட்டு சபையாக இருப்பதில் அதிகமாய்க் குறைவுபட்டுக் காணப்படுகிறது. மேலும், அது தன்னையே ஒரு நாமகரணக் கூட்டமாக்கியுள்ளது, ஏனெனில் நாமகரணக் கூட்டம் என்பது "பெயருக்காகச் செயல்படுவதாகும்." ஒரு பெயரைக் கொடுக்கையில் அது நாமகரணக் கூட்டமாகிறது. புதிய ஏற்பாட்டில் சபைக்கு ஒரு பெயரைத் தேடுவது வீணான ஆராய்ச்சியாகும், ஏனெனில், சபையானது நாமகரணமற்றது, அதாவது பெயரற்றது ஆகும்.[2]

## குறிப்புகள்

*[1]"இயேசு பிறப்பின் காலத்தைப்பற்றிக் கணிசமான அளவுக்குக் குழப்பம் உள்ளது. கி.பி. 1ஆம் ஆண்டு டிசம்பர் 25ம் தேதியன்று அவர் பிறக்கவில்லை. அவர் பிறந்து சுமார் ஆறு நூற்றாண்டுகளுக்குப் பிறகுதான் வரலாற்றை அதன் நிகழ்ச்சிகளின் வாயிலாக மதிப்பிடும் முயற்சி தொடங்கியது. டயோனிஸியஸ் எக்ஸிஜஸ் என்பவர் தம்மிடமிருந்த கணக்கீடுகளைக் கொண்டு, முந்தைய காலத்தைக் கணித்து, அவர் எது சரியென்று நினைத்தாரோ, அந்தத் தேதியைக் குறிப்பிட்டார். அவரது கணக்கீட்டின் அடிப்படையில், கிறிஸ்தவ நாட்காட்டியானது உண்டாக்கப்பட்டது. இன்றும் அது நடைமுறையில் உள்ளது. அவர், குறிப்பிட்ட தேதியானது பின்னாளில் சரியானதல்ல என்று நிரூபிக்கப்பட்டதே உண்மையில் பிரச்சனையாயிற்று. அவர் இன்னும் நான்கு ஆண்டுகள் பின்னோக்கிச் சென்று கணக்கிட்டு இருக்க வேண்டும். இயேசு பிறந்த ஆண்டு கி.மு. 5 அல்லது 4ஆக இருக்க வேண்டும். ஏரோதின் மரணம், யோவான் ஸ்நானனின் ஊழியத் தொடக்கம், ஆலயம் கட்டியெழுப்பியது, இன்னபிற ஆதாரங்களின் அடிப்படையில், கல்வியாளர்கள் இந்தத் தேதியில் நம்பிக்கை கொண்டுள்ளனர். தற்சமயத்தில் உள்ள விவாதங்களுக்கு முயற்சிக்காமல், கல்வியாளர்கள் அனைவரும் இந்தத் தீர்மானத்தில் ஒருமனமாயிருக்கின்றனர் என்று நாம் கூறலாம்"* (H.I. *ஹெஸ்ட்டர், புதிய ஏற்பாட்டின் இருதயம்* [*லிபர்ட்டி,* Mo.: *குவாலிட்டி பிரஸ், 1963*]*, 99); "ஏரோதின் மரணத்திற்குப் பின்பு உடனடியாக ஒரு சந்திர கிரகணம் ஏற்பட்டதென்று யோசிபஸ் குறிப்பிட்டுள்ளார் (பண்டைக்கால ஆய்வுகள்* XVII. vi.*4* [*167*]*). இந்த சந்திர கிரகணம் மார்ச்சு 12/13, கி.மு. 4 என்று தேதியிடப்படுகின்றது ... இன்று நாம் பயன்படுத்தும் நாள்காட்டி அமைப்பானது டயோனிஸியஸ் எக்ஸிஜஸ் (கி.பி. 500-550) என்பவரால் ஆறாம் நூற்றாண்டில் வடிவமைக்கப்பட்டது, அவர் இதற்குமுன் பயன்படுத்தப்பட்ட டயோகிளிட்டின் கால அளவைக் கைவிட்டார். டயோனிஸியஸ் எக்ஸிஜஸ் தமது கணக்கீட்டில் கி.பி. 1 ஆம் ஆண்டும், ரோமாபுரி ஸ்தாபிக்கப்பட்ட 754ம் ஆண்டும் ஒன்றாக இருப்பதாகக் கணித்தார்; ஆனால் அவரது கணக்கீட்டில் தவறு இருந்தது, இதுவும், மற்றும் மேலே கூறப்பட்ட யோசிபஸின் விபரங்களும், பின்னாளில் வந்த நாளாய்வாளர்கள் கிறிஸ்துவின் பிறப்பு ஏரோதின் மரணத்திற்கு முன்*

*தேதியிட்டிருந்ததை உணரும்படி வலியுறுத்திற்று, அது கி.மு. 4க்குப் பிறகு இருந்திருக்க முடியாது" (ஜேக். P. லூயிஸ், மத்தேயு எழுதின சுவிசேஷம், பாகம் 1, ஜீவனுள்ள வசனங்களின் விளக்கம் [ஆஸ்டின், டெக்ஸ்.: ஸ்வீட் பப்ளிஷிங் கம்பெனி, 1976], 50-51). [2]NASBயின் படி, கர்த்தருடைய சபைக்குப் பின்வரும் பெயர்கள் உள்ளன. (1) "என் சபை" (மத். 16:18) ஒருமுறை; (2) "சபை" (மத். 18:17), 63 முறைகள், அல்லது "சபைகள்" சுமார் 29 முறைகள்; (3) "தேவனுடைய சபை" (1 கொரி. 1:2), சுமார் 9 முறைகள்; "தேவனுடைய சபைகள்" 3 முறைகள்; (4) "புறஜாதியாரில் உண்டான சபை" (ரோமர் 16:4), ஒருமுறை; (5) "கிறிஸ்துவின் சபையார்" (ரோமர் 16:16), ஒருமுறை; (6) "பரிசுத்தவான்களுடைய சபைகள்" (1 கொரி. 14:33), ஒருமுறை; (7) "முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபை" யின் மக்கள் (எபி. 12:23), ஒருமுறை. இவ்வாறு, சபையில் உள்ள மக்களின் இயல்பு, அவர்களின் அழைக்கப்பட்டமை, மற்றும் அவர்களின் சுதந்திரம் பற்றிய ஏழு விதமான வித்தியாசப்பட்ட விளக்கங்கள் காணப்படுகின்றன, ஆனால் பெயர் எதுவும் தரப்படவில்லை. புதிய ஏற்பாட்டு சபைக்கு யாரேனும் ஒருவர், ஒரு பெயர் கொடுக்கிறார் என்றால், அவர் ஆவியானவர் செய்யாத ஒன்றைச் செய்கிறவர் ஆவார்.*